அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை கடிதம் : 02/2026

எனது இலக்கம் : EST-1/CIRL/03/0001-(I)

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.04.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## <u>தகவல் தொழில்நுட்பக் கருவிகளை அன்றாட கடமைகளுக்காகப் பயன்படுத்துதல்</u>

சேவைபெறுநர்களாக பொதுமக்கள் பொதுச் சேவையினைப் பெற்றுக்கொள்ளும் போது மற்றும் சேவைவழங்குநர்களாக அரச உத்தியோகத்தர்கள் பொதுச் சேவையினை வழங்கும் போது முகம்கொடுக்கும் பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தகவல் தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாடு மிகச்சிறந்த தீர்வாகும்.

02. விளைதிறனுள்ள மற்றும் முறையான நேர முகாமைத்துவத்துடன் கூடிய பொதுச் சேவையொன்றினைப் பேணுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய தகவல் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் அக்கருவிகளைப் பயன்படுத்த வேண்டிய முறை தொடர்பான எளிய விளக்கங்களைக் கொண்ட அறிவுறுத்தல் கோவையொன்றினை டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

03. தகவல் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் அவற்றின் பயன்பாடு தொடர்பான எளிமையான அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய அறிவுறுத்தல் கோவையானது, டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான https:// mode.gov.lk இல் தரவிறக்கத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ளதுடன், பின்வரும் இணைப்புகளின் ஊடாக உரிய அறிவுறுத்தல் கோவையை தரவிறக்கம் செய்ய முடியும்.

சிங்களம் - https://mode.gov.lk/si/guidelines/Docs/modeigsin.pdf

தமிழ் - https://mode.gov.lk/ta/guidelines/Docs/modeigtam.pdf

ஆங்கிலம் - https://mode.gov.lk/guidelines/Docs/modeigeng.pdf

04. மேற்படி தகவல் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் அக்கருவிகளின் பயன்பாடு தொடர்பான அறிவுறுத்தல் கோவை தொடர்பாக தங்கள் கீழுள்ள அனைத்து தாபனத் தலைவர்களையும் தெளிவுபடுத்தி, பொருத்தமானவாறு அவர்களது அன்றாடக் கடமைகளுக்காக இத்தகவல் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம் /எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
தொலைபேசி : 0112662340
தொலைநகல் : 0112692158
மின்னஞ்சல் முகவரி : ade-i@pubad.gov.lk